மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com
04.09.2022 ஞாயிற்றுக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களை ஒருங்கிணைந்து செயற்படுமாறு அழைப்பு



நீதியமைச்சின் ஆதரவுடன் வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு இலங்கை ஒருங்கிணைப்பு செயலகமொன்றை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. புலம்பெயர்ந்த சமூகத்துடனான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களிற்கு சேவையாற்றுவதை நோக்கமாக கொண்டு இந்த அலுவலகத்தை அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இந்த அலுவகத்தை அமைக்கும் பணிகள் கிட்டத்தட்ட பூர்த்தியாகிவிட்டன அதன் பின்னர் அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களை இந்த அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கும் என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட அலுவலகம்காணிவிடயங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் போன்ற விடயங்களில் புலம்பெயர்ந்த தமிழர்களிற்கு உதவும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். காணாமல்போனவர்கள் தொடர்பில்புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் காணப்படும் கரிசனைகளிற்கு தீர்வை காணும் விடயத்தில் இந்த அலுவலகம் காணாமல்போனவர்களிற்கான அலுவலகத்துடன் இணைந்து செயற்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். புதிய அலுவலகம் தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே புலம்பெயர் தமிழர் அமைப்புகளை தொடர்புகொண்டுள்ளது என தெரிவித்துள்ள நீதியமைச்சர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வின் போது அரசாங்க பிரதிநிதிகளிற்கும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.இந்த சந்திப்பின்போது

02

## அரசாங்கம் அமைச்சு சூதில்



இருநூற்றி இருபது இலட்சம் மக்கள் பாரிய துன்பங்களை அனுபவிக்கும் வேளையில் அரசாங்கம் அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்வதற்குப் முண்டி அடித்துக்கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்படும் போது இந்நாட்டு மக்கள் நடுங்கத் தொடங்குவார்கள் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,மக்கள் ஏற்கனவே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மிகவும் அவதிப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

02

## ஜனாதிபதி - ரெலோ சந்திப்பு
### 24 அரசியல் கைதிகளை விடுவிக்க இணக்கம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான ரெடலோ அவசரமான சந்திப்பொன்றை நடத்தியுள்ளது. ஜனாதிபதி அலுவலகத்தில் 3 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம் பி, செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரனம் எம்பி மற்றும் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சுரேந்திரன்

02

## அரசாங்கமொன்று அவசியமில்லை என்பதையே காட்டுகிறது

பாணின் சடுதியான விலையேற்றம் பாணை மக்களினதும் அதனை மூலதாரமாக கொண்டு ஜீவனோபாயத்தை மேற்கொள்கின்ற பல தரப்பினரையும் வெகுவாக பாதித்துள்ளது. இருப்பினும் நாட்டில் ஒரு இறாத்தல் பாணின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து கொண்டு செல்லும் போது அதை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுமாயின் இந்த நாட்டிற்கு அரசாங்கமொன்று அவசியமில்லை என்பதே அர்த்தம் என்று நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது. நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு தலைவர் ரஞ்சித் விதானகே இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நாட்டு மக்கள் பாரியதொரு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள்.பாணின் தொடர்சியான விலை அதிகரிப்பு நாட்டு மக்களின் சீவனொபயத்தை முழுமையாக பாதித்துள்ளது.

## மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு விண்ணப்பம்

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது. இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் உள்ளடங்கிய சுற்றறிக்கையை அமைச்சு அண்மையில் வெளியிட்டிருந்தது. சுற்றறிக்கையின்படி, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஒரு மின்சார வாகனம், நான்கு சக்கர வாகனம் அல்லது இரு சக்கர வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி உண்டு. மேலும் இதற்கான அனுமதி 2022 மே மாதம் முதல் டிசம்பர் வரை செல்லுபடியாகும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## இணக்கப்பாடு மகிழ்ச்சியளிக்கிறது



சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இலங்கைக்கும் இடையே ஊழியர் மட்ட உடன்பாடு எட்டப்பட்டதில் மிகவும் மகிழ்ச்சியடைவதாக சர்வதேச நாணய நிதியத்தின்(**IMF**) தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார். 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் விரிவான கடன் வசதியை இலங்கைக்கு வழங்குவதற்கான சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை, இலங்கைக்கு முக்கியமானதொரு நடவடிக்கையாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரேரணையை நிறைவேற்றுவதில் பிரச்சினைகள் எதுவும் இருக்காது



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் பொறுப்புக்கூறல், நீதி மற்றும் மனித உரிமைகள், நல்லிணக்கம் தொடர்பில் புதிய பிரேரணையொன்று நிறைவேற்றப்படவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த பிரேரணைக்கான ஆதரவுப்பட்டியலில் முக்கிய நாடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், இம்முறை பிரேரணையை நிறைவேற்றுவதில் பிரச்சினைகள் எதுவும் இருக்காது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். புதிய பிரேரணை நிறைவேற்றம் தொடர்பில் அமெரிக்கா, சுவிட்சர்லாந்து மற்றும் நோர்வே நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகருடன் நடைபெற்ற முக்கிய கலந்துரையாடல்களின்போது மேற்படிவியடம் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.


## புற்று நோயாளர்களுக்கான மருந்துகளுக்கு தட்டுபாடு



மார்பக புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் **tabzumab** தடுப்பூசி உட்பட புற்றுநோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் 20 வகையான மருந்துகளுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளதால் அவர்களுக்கான தொடர் சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு ,கண்டி , கராப்பிட்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பொது வைத்தியசாலைகள் மற்றும் மஹரகம அபெக்ஷா வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில்குறித்தவயடிணரஅயடிதடுப்பூசிஉள்ளிட்டமருந்துகளுக்குதட்டுபாடு ஏற்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 1000 மார்பக

02

## 400 எரிபொருள் நிலையங்களுக்கு பூட்டு



இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய கொடுப்பனவு முறைமையின் காரணமாக, 400 எரிபொருள் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என எரிபொருள் நிரப்பும் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களை

அரசாங்கம்புதிய செயலகம் குறித்து புலம்பெயர் அமைப்புகளிற்கு தெளிவுபடுத்தும் என அமைச்சர் தெரிவித்துள்ளதுடன் இந்தசெயலகம் மூலம் பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதற்கு என்ன செய்யலாம் என்ற கேள்வியை எழுப்பும். 2015 அல் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீரவின் கீழ் இவ்வாறான அலுவலகமொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றன ஆனால் அவ்வேளை காணப்பட்ட நிலைமை காரணமாக இது சாத்தியப்படவிலை ஆனால் நாங்கள் இந்த முறை அதனை ஆரம்பிப்பதில் உறுதியாகவுள்ளோம் நீதியமைச்சு அதற்கு ஆதரவளிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

## அரசாங்கம் அமைச்சு சூதில்

நாட்டில் இடம்பெற்று வரும் காரணங்களை நோக்கும் போது சந்தர்ப்பவாத அரசியல் மிகவும் தெளிவாகத் தெரிகின்றது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இத்தகைய சூதுகளில் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ ஒருபோதும் தொடர்பு கொள்ளாது எனவும் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட பலபிட்டிய தேர்தல் தொகுதி கூட்டம் நேற்று (03) இடம் பெற்றது. பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தை தொகுதியின் பிரதான அமைப்பாளரான சட்டத்தரணி கமல் ஜயந்த சொய்சா ஏற்பாடு செய்திருந்தார். விரட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மீண்டும் நாடு திரும்பியுள்ளார் எனவும், அது அவ்வாறு நடக்கும் போது, போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது அரசு தனது வன்முறையை பிரயோகித்து அஅவர்கள் மீது அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி - ரெலோ சந்திப்பு

ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பில் ரெலோ ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தண்டனை வழங்கப்பட்ட 24 அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மற்றவர்களுடைய விடுவிப்பு சம்பந்தமாக நீதி அமைச்சருடன் கலந்தாலோசித்து விரைவான நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துகின்ற வேலைத்திட்டத்தை இனிமேலும் பின் போடாது நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஜனாதிபதி விரைந்து அதை செயல்படுத்தி தருவதாக உறுதியளித்தார். இராணுவ பிரசன்னத்தை பாதுகாப்புச் சபையின் ஊடாக கட்டங்கட்டமாக குறைக்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். புலம்பெயர் அமைப்புகளின் தடைகளை நீக்குவதோடு, புலம்பெயர் முதலீட்டாளர்கள் சம்பந்தமான அரசியல் அதிகார ரீதியான மற்றும் பாதுகாப்பான கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலமே அவர்களை நம்பிக்கை கொள்ள வைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. முக்கியத்துவத்தின் அடிப்படையில் தான் எல்லா விடயங்களுக்கும் அவசியமான மற்றும் அவசரமான நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

## புற்று நோயாளர்களுக்கான மருந்துகளுக்கு தட்டுபாடு

புற்றுநோய் தடுப்பூசிகளை பெறுவதற்கு கொள்வனவு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் சுமார் 500 தடுப்பூசிகள் பெறப்பட்டு வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர்கள் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளனர். புற்று நோயாளர்களுக்கு தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்க வேண்டியுள்ள போதிலும், இந்த மருந்துகள் இல்லாததால் நோயாளர் பராமரிப்பு சேவைகள் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மஹரகம வைத்தியசாலையில் வருடாந்தம் சுமார் 3,000 புற்று நோயாளர்கள் சிகிச்சைக்காக வருவதாகவும், நாளாந்தம் சுமார் 1,000 நோயாளர்கள் உள்நோயாளிகளாகவும் வெளிநோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஓட்டமாவடி மத்திய கல்லூரி மீண்டும் சாதனை

**ந.குகதர்சன்**

இம்முறை வெளியான க.பொ.த (உ.்த) பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மட்.்மம.் ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சாதனை படைத்துள்ளது. அந்த வகையில் பொறியல் தொழிநுட்ப பிரிவில் **SIM**.ஹம்சாத் எனும் மாணவன் **2AB** சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தை பெற்றுள்ளார். உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பிரிவில் ஆகேு மில்பரா **2AB** சித்தியோடு மாவட்ட மட்டத்தில் 4ம் இடத்தையும், **JAP**. சாரனா **2AB** சித்தியோடு மாவட்ட மட்டத்தில் 05ம் இடத்தையும் பெற்று பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர். உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் யு.ஹம்சத் சஹி எனும் மாணவி மாவட்ட மட்டத்தில் 5ம் இடத்தைப் பெற்று மருத்துவத்துறைக்கு தெரிவாகியுள்ளார்.

ஙபாடசாலை பெறுபேற்றின் அடிப்படையின் மருத்துவத்துறைக்கு 04 மாணவர்களும், பொறியியல் துறைக்கு 03 மாணவர்களும், பொறியியல் தொழிநுட்ப பிரிவில் 06 மாணவர்களும், உயிர் முறைமை தொழிநுட்ப பிரிவில் 07 மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர், அத்துடன் கலைத்துறையில் 03 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளதோடு, வர்த்தக துறைக்கு 01 மாணவரும் பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றுள்ளனர்.

இம்முறை பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 57 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளதோடு, 131 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப தகைமையைப் பெற்றுள்ளனர். இது பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் **70%** அடைவாகும். சாதனை படைத்த மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த பாடசாலை முதல்வர் அல்ஹாஜ் ஆயு, ஹலீம் இஸ்ஹாக் **(SLPS - 1)** அவர்களுக்கும் அனைத்து பிரிவுகளின் பகுதித் தலைவர்கள் கற்பித்த ஆசிரியகள் அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

# ஈஸ்ட் லைட் நிறுவனத்தினால் சக்கர நாற்காலிகள் வழங்கிவைப்பு




மட்டக்களப்பை தளமாககொண்டு இயங்கிவரும் பிரபல சமூகசேவை தொண்டு நிறுவனமான ஈஸ்ட் லைட் **(EAST LIGHT)** நிறுவனத்தினால் விசேட தேவையுடையோருக்கான பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்சியாக, கிரான் பிரதேசத்தில் வசிக்கும் தயாபரன் சனோஜன் என்னும் விசேட தேவையுடைய பிள்ளைக்கு சக்கர நாற்காலியொன்று வழங்கிவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கிரான் பிரதேச செயலாளர் ராஜ்பாபு கலந்துகொண்டு குறித்த பிள்ளைக்கு சக்கர நாற்காலியை வழங்கிவைத்தார். இதில் கலந்துகொண்ட ஈஸ்ட் லைட் (**EAST LIGHT**) தொண்டு நிறுவனத்தின் ஸ்தாபர் க.ரவிகிருஸ்ணா கருத்து தெரிவித்தபோது, இன்று வழங்கப்பட்ட சக்கர நாற்காலிக்கான நிதியுதவி சுவிஸ் நாட்டில் வதியும் ஆறுமுகம் அன்பழகன் அவர்களால் வழங்கப்பட்டதாகவும், அதற்காக தமது நிறுவனத்தின் சார்பாகவும் பயனாளி சார்பாகவும் நன்றியை தெரிவிப்பதாக கூறினார். அத்தோடு விசேட தேவையுடையவர்கள்கீழேகுறிப்பிடப்பட்டுள்ள முகவரி அல்லது தொலைபேசி இலக்கம் ஊடாக தமது நிறுவனத்தை தொடர்புகொண்டு கோரிக்கைகளை முன்வைக்கலாமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நுவரெலியா பொலிஸ் காரியாலய நிகழ்வுகள்



**தலவாக்கலை பி.கேதீஸ்**

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 156 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு பல சமூக ,சமய நிகழ்வுகளுடன் நுவரெலியா தலைமையக பொலிஸ் நிலையத்தில் பல நிகழ்வுகள் நேற்று முன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் நுவரெலியாவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக யூ உடுகமசூரிய , நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர் . இதில் நாட்டுக்காக உயிர் நீர்த்த பொலிஸ் வீரர்களை நினைவு கூர்ந்தமை குறிப்பிட்டத்தக்கது.இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்கள் , ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்

# மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்ட சிவயோகநாதன்

**(ஜதுர்சயன்)**

சிவில் சமூக செயற்பாட்டாளர் சிவயோகநாதன் பயங்கரவாத தடுப்புப் பிரிவினால் விசாரணைக்கு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் சபாரெத்தினம் சிவயோகநாதன் என்பவரை பயங்கரவாத தடுப்புப் பிரிவிற்கு விசாரணை ஒன்றுக்காக அழைக்கப்பட்டுள்ளார். சனிக்கிழமை(03.09.2022) பி.ப 5.15 மணியளவில் மட்டக்களப்பு பாலமீன்மடு பகுதியில் அமைந்துள்ள எனது வீட்டிற்கு வருகை தந்த பயங்கரவாத தடுப்பு பிரிவைச் சேர்ந்த இரு பொலிசார் என் மீது விசாரணை செய்யவேண்டியுள்ளதால் எதிர்வரும் 09.09.2022 அன்று இலக்கம் 149 பூட்டாலி கட்டிட தொகுதி கிருளப்பனை கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு 01 இன் நிலையப் பொறுப்பதிகாரி அவர்களை சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் அதற்கான அழைப்புக்கடிதமும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனாலும் எனது தந்தை நோயால் பாதிக்கப்பட்டு உள்ளதால் பிறிதொரு திகதியை தருமாறு கேட்டுக்கொண்டேன். என்னகாரணத்திற்காக விசாரணை என்ற விபரங்கள் எதுவும் எனக்கு கூறப்படவில்லை.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# பெண்களுக்கான செயலமர்வு



**ஹஸ்பர்**

டிஜிடல் அறிவை மேம்படுத்தும் "ஜனனி" நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாக பெண்களை வலுவூட்டல் தொடர்பிலான தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கான செயலமர்வொன்று திருகோணமலையில் இடம் பெற்றது. குறித்த செயலமர்வானது திருகோணமலை தனியார் ஹோட்டல் ஒன்றில் இன்று (04) இடம் பெற்றதுடன் இதனை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (ஊயகககந) ஏற்பாட்டின் கீழ் ஆர்.டி.சி நிறுவனம் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

தற்கால சூழ் நிலையில் டிஜிடல் அறிவை மேம்படுத்தி உள்ளூராட்சி மன்ற பெண் பிரதிநிதிகள் மற்றும் சமுதாயம் சார் கிராமிய மட்ட பெண் அமைப்புக்களை வலுப்படுத்துவதன் ஊடாக மக்கள் பிரதிநிதியை திறம்பட வழிநடாத்துவதற்கான ஒரு முன்னுதாரணமாக இது விளங்குகிறது. சமூக மட்டத்தில் டிஜிடல் ஊடான அறிவு மேம்பாடு திறன் மனப்பாங்கு ஊடாக இணைய வழி தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சமூக ஊடகங்கள் வாயிலாகவும் தங்களது பிரச்சினைகளை வெளிக்கொணரவும் ஒரு அடித்தளமாக குறித்த நிகழ்வின் போதான எதிர்பார்ப்பாகும்.

குறித்த நிகழ்வில் ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுல கஜநாயக்க மற்றும் ஊடக பயிற்றுவிப்பாளரும் ஊடகவியலாளருமான களாவர்ஷி கனகரத்னம், டிஜிடல் பாதுகாப்பு பயிற்றுப்பாளர் ஹரின்ட்ர நிசங்க ஆகியோர்கள் வளவாளராக கலந்து கொண்டு பல விடயங்களை இதன் போது தெளிவுபடுத்தினர்.

இதில் கெபே நிறுவன திருகோணமலை மாவட்ட இணைப்பாளரும் ஆர்.டி.சி அமைப்பின் தலைவருமான ஆர். எம்.ராபில் உட்பட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், சமுதாயம் சார் நிறுவன பெண் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# மெய்வல்லுனர் விளையாட்டு விழா



**(றியாஸ் இஸ்மாயில்)**

அக்கரைப்பற்று கோட்டமட்ட பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கிடையிலான சிறுவர் மெய்வல்லுனர் விளையாட்டு விழா அக்கரைப்பற்று கல்வி வலய சிறுவர் மெய்வல்லுனர் விளையாட்டுக்குப் பொறுப்பான இணைப்பாளரும்,உதவிக் கல்விப்பணிப்பாளருமான ஏ.எல்.பாயிஸ் நெறிப்படுத்தலில்,அக்கரைப்பற்று பதில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம். உவைஸ் தலைமையில் கடந்த சனிக்கிழமை (03.09.2022) அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.இதன் ஆரம்ப நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் ஆரம்பப்பிரிவிற்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். சிறுவர் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியின் முடிவுகளின் பிரகாரம் கலவன் மாணவர்கள்(ஆண்கள் மற்றும் பெண்கள்) பங்கு கொண்ட போட்டியில் தரம் – 3ம் பிரிவில் முதலிடத்தினை பள்ளிக்குடியிருப்பு அஸ்–ஸபா கனிஸ்ட வித்தியாலயமும்,இரண்டாமிடத்தினை சம்சுல் உலும் வித்தியாலயமும்,மூன்றாமிடத்தினை அல் –பதுர் வித்தியாலயமும் வெற்றி பெற்றனர்.தரம் –4 இல் முதலிடத்தினை பதுர் வித்தியாலயமும்,இரண்டாமிடத்தினை பள்ளிக்குடியிருப்பு அஸ்–ஸபா கனிஸ்ட வித்தியாலயமும் மூன்றாமிடத்தினை அர் –றஹ்மியா வித்தியாலயமும் வெற்றி பெற்றனர். தரம் –5 இல் முதலாமிடதினை காதிரியா வித்தியாலயமும்,இரண்டாமிடத்தினை அல் –பதுர் வித்தியாலயமும்,மூன்றாமிடத்தினை பள்ளிக்குடியிருப்பு அஸ்–ஸபா கனிஸ்ட வித்தியாலயமும் வெற்றி பெற்றனர்.

இப்போட்டியில் தரம் –3 ஆண்கள் பிரிவில் முதலிடத்தினை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையும்,பெண்கள் பிரிவில் முதலிடத்தினை சாஹிறா வித்தியாலயமும் வெற்றி பெற்றனர்.தரம் –4 ஆண்கள் பிரிவில் முதலிடத்தினை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையும்,பெண்கள் பிரிவில் சாஹிறா வித்தியாலயமும் வெற்றி பெற்றனர்.தரம் 5 ஆண்கள் பிரிவில் முதலிடத்தினை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையும்,பெண்கள் பிரிவில் அஸ்–ஸிறாஜ் கனிஷ்ட கல்லூரியும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் உடற்கல்வி பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர்கள்,பாடசாலைகளின் அதிபர்கள்,ஆசிரியர்கள்,பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# தலைமன்னாரில் இராணுவத்தினரின் உதவியுடன் இரத்ததானம்



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பொது வைத்தியசாலைக்கு இரத்தம் தேவைப்படுவதாக அன்மையில் மன்னார் வைத்தியசாலை பணிப்பாளரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக தலைமன்னார் பிரதேச வைத்திசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி தனோஷ் பெர்னாண்டோ அவர்கள் இரத்ததானம் தொடர்பாக பேசாலை 542 இராணுவ முகாம் அதிகாரியை நாடியிருந்தார். இதற்கமைய பேசாலை இராணுவ முகாமைச் சேர்ந்த ஐம்பதுக்கு மேற்பட்ட இராணுவத்தினரும் மற்றும் பொது மக்களும் 80 பேர் இவ் இரத்ததானம் வழங்கும் முகாமில் இரத்ததானம் வழங்கினர். தலைமன்னார் வைத்தியசாலையில் சனிக்கிழமை (03.09.2022) இவ் இரத்தானம் வழங்கும் முகாம் இடம்பெற்றது. தலைமன்னார் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு மற்றும் மன்னார் 306பி லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் அனுசரனையுடன் இவ் முகாம் இடம்பெற்றது. இங்கு பெறப்பட்ட இரத்தம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ் இரத்தானம் வழங்கும் நிகழ்வில் வைத்திய கலாநிதிகள் தலைமன்னார் வைத்தியசாலை பொறுப்பதிகாரி தனோஷ் பெனாண்டோ , மன்னார் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டெனி மற்றும் மு.கதிர்காமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளின் ஒன்றுகூடல்





**(பைஷல் இஸ்மாயில்)**

திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளை ஒருங்கிணைத்து கலைத்துறைசார் வாண்மையை மேலும் முன்னோக்கி நகர்த்தும் நோக்கில் "ஒரு பொழுதில் ஒன்று கூடுவோம்" எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட பெண் எழுத்தாளர்கள் ஆளுமைகளின் ஒன்றுகூடல் இன்று (03) மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்ஷ னின் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்த ஒன்றுகூடலின் வளவாளர்களாக, தம்பலகாமம் பிரதேச செயலாளர் (திருமதி) ஜெயகௌரி ஸ்ரீபதி, திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியின் அதிபர் (திருமதி) சுபத்திரா ஜோன் தேவதாஸ், திருகோணமலை புனித மரியாள் கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி நிரோஷா, முன்பள்ளி அதிபர் அருஷா ஜெயராஜா, சட்டத்தரணி (திருமதி) ஐஸ்வர்யா சிவகுமார், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் (திருமதி) என்.ஸ்ரீதேவி, கிழக்கு பல்கலைக்கழக நூலகர் (திருமதி) பானு சுதாகரன், சுதந்திர ஊடகவியலாளர் கல்யாணி நவரெத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது, தற்கால இடர் மிகுந்த சூழலை எதிர்கொள்வதில் பெண்களின் பங்களிப்பு, பெண்களும் சட்டமும், பெண் ஆளுமையும் இன்றைய நிலையும், நிர்வாகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், பெண்களும் நிர்வாக ஆற்றலும், பேகர் சமூக பண்பாடும் தற்காலத்தின் சவால்களும், பெண் தலைமைத்துவ குடும்பமும் தற்காலத்தில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும், பெண்களும் அரசியலும், அரங்கும் பெண்களும், தற்கால கல்வி முறைமையில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்புக்களில் பல்வேறுபட்ட முக்கிய விடயங்கள் பேசப்பட்டதுடன் பாடல், வயலின் இசை, கவிதை, நாடகம், கூத்து போன்ற நிகழ்வுகளும் பெண்களினால் நிகழ்த்தப்பட்டது.

இந்த ஒன்றுகூடலில் கலந்துகொண்ட திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளை கௌரவித்து அவர்களுக்கான சான்றிதழ் மற்றும் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட 100 சிறுகதை அடங்கிய நூல்களையும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சனினால் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# பாண் விலை ஏற்றம் ஏழை மக்களுக்கு ஜீரணிக்க முடியாத நிலை

**முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்**



**( வாஸ் கூஞ்ஞ)**

இலங்கையில் பொருளாதார சுமையின் காரணமாக பல குடும்பங்கள் நாளாந்தம் உண்ணும் மூன்று நேர உணவை இரண்டு வேளையாக்கி சிறுவர்கள் போஷாக்கு தன்மை குறைந்து காணப்படும் இத்தருணத்தில் பாணின் விலையும் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதால் ஏழை மக்கள் மேலும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளதாக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ் கவலை தெரிவித்துள்ளார். முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ் ஊடக செய்தியில் தெரிவித்துள்ளதாவது சாதாரண மக்கள் அன்றாட வருமானங்களை இழந்து அரசாங்கத்தின் நிவாராணங்கள் இன்றி வாழ்க்கைச் சுமையை தாங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நேரத்தில் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மூன்று வேளை உணவைத் தவிர்த்து இரண்டு வேளை உணவை அரை குறையாக உண்ணும் இந்த நேரத்தில் பாணிண் விலை 300 ரூபாயை தாண்டியமை மேலும் ஏழை மக்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. பாடசாலை மாணவர்களும் குழந்தைகளும் போசாக்கான உணவு இன்மையால் மந்த போசாக்கு நிலைக்கு நாளாந்தம் தள்ளப்படுகின்றனர் இதனால் மாணவர்களின் குழந்தைகளின் உளவுறன் மற்றும் உடல் நிலை என்பன பாதிக்கப்படுவதுடன் செயல்திறன் வளர்ச்சியும் பாதிக்கப்படகின்றது. கோதுமை மா மற்றும் பேக்கரி உற்பத்திகளின் விலைகள் தொடர் ஏற்றத்தை அடைவதால் சாதாரண அன்றாடம் காச்சிகளின் உணவுத் தேவைகள் பாதிக்கப்படும் இதனால் அரசாங்கம் உடனடியாக கோதுமை மற்றும் பேக்கரி உற்பத்திகளின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு நிவாரணம்



**நூருள் /ஹுதா உமர்**

கல்முனை பிராந்தியத்தினை மையப்படுத்தியதாக பல்வேறுபட்ட வாழ்வாதார மேம்பாட்டு நல திட்டங்களையும், நிவாரண விநியோகங்களையும் கல்முனையன்ஸ் போரம் முன்னெடுத்துவருகின்றது. அந்தவகையில் நாட்டில் நிலவிவருகிற பொருளாதார நெருக்கடி சூழ்நிலை காரணமாக வாழ்வாதாரம் முடக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்குகின்ற குடும்பங்களுக்கான நிவாரண நிதி விநியோகிக்கும் செயற்றிட்டம் ஒன்றினை கல்முனையன்ஸ் போரம் நடைமுறைப்படுத்தியது. மாளிகைக்காடு,சாய்ந்தமருது,கல்முனை,இஸ்லாமபாத் மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களிலிருந்து பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு தலா 20,000 ரூபாய் நிதி நிவாரணம் இந்த நிகழ்வில் வழங்கிவைக்கப்பட்டது. கணவனை இழந்த மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் தலைமை தாங்குகிற குடும்பங்கள் இத்திட்டத்தின் பயனாளிகளாக தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

# சீனக்குடா பொலிஸ் நிலையத்திலும் நிகழ்வு



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156 வது வருட நிறைவு தினத்தை ஒட்டி நாடாளவிய ரீதியில் பொலீஸ் நிலையங்களில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. திருகோணமலை மாவட்டம் ,சீனக்குடா போலீஸ் நிலையத்தில் 156 ஆவது தினம் நேற்று (03) அனுஷ்டிக்கப்பட்டது. சீனக்குடா போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தம்மிக்க பெரேரா தலைமையின் கீழ் இந்த நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் உப்புவெளி போலீஸ் நிலையம் பொறுப்பதிகாரி உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது போலீஸ் திணைக்களத்தின் வரலாறு போலீஸ் ஆரம்பிக்கப்பட்ட விடயங்கள் முதலான விடயங்கள் போலீஸ் அதிகாரிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டன. நேற்று (03) தொடக்கம் எதிர்வரும் பத்தாம் திகதி வரை சீனக்குடா போலீஸ் நிலையத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட இருக்கின்றன. இன்றைய தினம் கிரிக்கெட் மற்றும் நடமாடும் சேவை, சர்வ மத சமயத்தவர்களின் ஆசிர்வாதம், தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழை மக்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதாக போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

# வவுணதீவில் உறுதியுரை விழிப்புணர்வு நிகழ்வு




**எஸ். சதீஸ்**

எமது சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு மிக்க பிரஜைகள் நாமே எனும் உறுதியுரை விழிப்புணர்வு நிகழ்வு மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேசத்தில் சனிக்கிழமை 03.09.2022 முன்னெடுக்கப்பட்டதாக செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்துடன் இணைந்து சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கவும் சிறுவர்களை பாதுகாப்பதற்குமான இந்த விழிப்புணர்வு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

மட்டக்களப்பு ஆயித்தியமலை சதாசகாய மாதா திருத்தலத்தை நோக்கிய வருடாந்த திருவிழா பாதயாத்திரை சனிக்கிழமை 03.09.2022 வவுணதீவு வழியாகச் சென்றபொழுது பாத யாத்திரையில் கலந்து கொண்ட பொதுமக்கள் இந்த உறுதியுரையிலும் கைச்சாத்திட்டனர். 2700 பேர் சிறுவர்களைப் பாதுகாப்போம் எனும் உறுதியுரைப் பிரகடனத்தில் கையெழுத்திட்டதாக அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் அலுவலர் அனுலா அன்ரன் தெரிவித்தார். இந்த செயற்பாட்டின் மூலம் சிறுவர் பாதுகாப்புக்கு நாமே பொறுப்பாளிகள் என்பதை ஒவ்வொரு பிரஜையும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே பிரதான பரிந்துரையாக இருந்ததாக அனுலா மேலும் தெரிவித்தார்.

“எமது சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு மிக்க பிரஜைகள் நாமே. இன்று நான் கையெழுத்திடுவதன் ஊடாக எமது சிறுவர்களின் பாதுகாப்பிற்காகவும் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கும் குரல் கொடுக்கும் பொறுப்புள்ளவர் என்பதை உறுதி செய்கின்றேன்.” என்று கையெழுத்திடும் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதேவேளை “சிறுவர்கள் முன் மனிதர்களாவோம்” எனும் கூடார விழிப்புணர்வில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் “சிறுவர்களின் ஆளுமையில் அக்கறை செலுத்துவோம், ஆற்றல் மிக்க எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவோம், சிறுவர்களுக்கு எதிரான எந்த வன்முறையும் மனித குலத்திற்கு எதிரானது” என்பன உள்ளிட்ட பல்வேறுபட்ட வாசகங்களைத் தாங்கிய வசனங்கள் பதாதைகளில் எழுதப்பட்டிருந்தன. பாதயாத்திரையில் சென்ற பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்துடன் இணைந்து தாக சாந்தி பானங்களையும் ஏற்பாடு செய்து இலவசமாக வழங்கி வைத்தனர்.

# 100 நாட்கள் செயல்முனைவு மக்கள் குரல் 35 ஆவது நாளாக தம்பலகாமத்தில்




**ஹஸ்பர்**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் “வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 35 வது நாள் போராட்டம் இன்று (04) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசத்தின் சிவசக்திபுரம் கிராமத்தில் வயல்வெளிகள் சூழ்ந்த சேனாவள்ளி குளத்திற்கு அருகில் இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் தம்பலகாமம் பிரதேசத்தினைச் சேர்ந்த மக்கள், விவசாயிகள்,சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர்,மீனவ மற்றும் விவசாய சங்கத்தினர், செயற்பாட்டாளர் என 70 இற்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனக் கோரி நடைபவணியாக வருகை தந்து சேனாவெளிக்குளக் கட்டில் கூடியிருந்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.”தமிழ் அரசியல்வாதிகளே ஒன்று சேருங்கள், எமது காணி எமது உரிமை, கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும், போன்ற பதாகைகளை ஏந்தியவாறும் மாட்டு வண்டியிலும் பேரணியாக சென்று தங்களது அமைதியான போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அரசியல்வாதிகள் தங்களுக்கான உரிமைகளை பெற்றுத்தர வேண்டும் சிறுபான்மை சமூகத்திற்கான தீர்வினை முன்வைக்க வேண்டும் எங்களது உரிமைகளை பெற்றுத் தாருங்கள் .பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பல இன்னல்களை எதிர்நோக்குகிறோம் இதற்கான தீர்வை பெற்றுத்தருமாறும் விவசாய பூமியாக தம்பலகாமம் காணப்படுகிறது இனிமேலாவது இயற்கை உரம் கிருமி நாசினியை இலகுவாக பெற்றுத் தாருங்கள் விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர்கள் எனவும் வட கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஊடாக அரசாங்கத்திடம் கோரிக்கையை முன்வைக்கிறோம் என்றனர்.

# சந்திவெளியில் 156 ஆவது பொலிஸ் தின நிகழ்வு



**க.ருத்திரன்**

156 ஆவது பொலிஸ் தின நிகழ்வு சந்திவெளி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.சந்திவெளி பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி எம்.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேசத்தில் திறன்பட செயற்பட்ட பொலிசார் மற்றும் பொலிஸ் உபதேச குழுக்களின் பிரதிநிதிகளுக்கு சாண்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.இந் நிகழ்வில் வாழைச்சேனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.டி.டி. நிலங்க மற்றும் மதகுருமார்கள் கலந்து கொண்டனர். பொலிஸ் தின வாரத்தினை முன்னிட்டு 03.09.2022. முதல் 10.09.2022 வரையான ஒரு வார காலத்தில் சிறப்பு செயல் திட்டங்களை செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. விளையாட்டு நிகழ்வுகள்,போதை பொருள் ஒழிப்பு,டெங்கு ஒழிப்பு,மருத்துவ நடமாடும் சேவை என பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி எம்.சுதர்சன் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வுகள் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.பொலிஸ்மா அதிபர் சி.வி.விக்கிரமரட்னவின் ஆலோசனையில் கிழக்கு மாகாண சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் ராஜிதஸ்ரீயின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சரத்குமார,மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.டி.ரி.சுகதபால,மற்றும் வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.டி.டி.நிலங்க ஆகியோர்களது நெறிப்படுத்தலில் நிகழ்வுகள் யாவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# அறநெறிக்கல்வி உயர்நிலையில் சாதனை படைக்க உதவியாக இருந்தது



**(காரைதீவு நிருபர் சகா)**

உயர்தர உயிரியல்த்துறையில் மூன்று பாடங்களிலும் மூன்று “ஏ” சித்திகளை பெறுவதற்கு எனக்கு அறநெறிகல்வி மிகவும் உதவியாக இருந்தது என்று திருக்கோவில் வலயத்தில் பின் தங்கிய விநாயகபுரம் தமிழ் மகா வித்தியாலயத்தில் முதல் தடவையாக. உயிரியல்த்துறையில் மூன்று” ஏ” சித்திகளை பெற்ற முருகானந்தம் தனுஷ்கா என்ற மாணவி தெரிவித்தார். விநாயகபுரம் தமிழ் மகாவித்தியாலய வரலாற்றில் உயிரியல் துறையில் மூன்று பாடங்களிலும் மூன்று ‘ஏ” சித்திகளை முருகானந்தம் தனுஷ்கா இம்முறை பெற்று மருத்துவத் துறைக்கு தெரிவாகி இருக்கின்றார் என்பதை பாடசாலை அதிபர் த.புஸ்பராஜா உறுதிப்படுத்தினார்.

சாதனை மாணவி தனுஷ்கா கூறுகையில்.. அறநெறி கல்வியானது எனக்கு அதிகாலையில் எழுந்து கற்பதற்கும் மனதை ஒருநிலைப்படுத்துவதற்கும் மிகவும் உதவியாக இருந்தது.மேலும்

அளிக்கப்பட்ட வழிகாட்டல் பயிற்சிகள் தியான பயிற்சிகள் மேலும் உதவியாக இருந்தது. இதன் ஊடாக எனக்கு உயர்தர பாடங்களை படிப்பதற்கு இலகுவாக இருந்தது. இந்த வேளையிலே கற்பித்த ஆசிரியர்கள் அதிபர் பெற்றோர்கள் இதற்கு உதவியாக இருந்த குருகுலத்தினர் அனைவரையும் நன்றியோடு பார்க்கின்றேன் என்றார். அறநெறிக்கல்வியை வழங்கிய தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல பணிப்பாளர் கண்.இராஜரெத்தினம்( கண்ணன்) பாராட்டுகையில்.. முருகானந்தம் தனுஷ்கா இளமையில் இருந்தே அறநெறிக் கல்வியை ஆர்வத்துடன் கற்று வந்தார். இவர் பின்தங்கிய விநாயகபுரம் கிராமத்தில் சிறந்த வைத்தியராக வருவார் என்று அன்றே ஆரூடம் கூறியிருந்தோம். அது இன்று கனிந்திருக்கின்றது. எனவே அனைத்து இந்து மாணவர்களும் தொடர்ந்து அறநெறி கல்வியறிவை பெற்று கொள்ள வேண்டும் என்றார்.

# முதலைக்குடா மகாவித்தியாலய வரலாற்றில் முதல் மருத்துவ துறை மாணவன் யுவராஜ் தெரிவு



**( காரைதீவு நிருபர் சகா)**

மட்டக்களப்பு மேற்கு வலயத்துக்கு உட்பட்ட முதலைக்குடா மகாவித்தியாலய வரலாற்றில் முதலாவது மருத்துவ துறை மாணவனாக, ரவீந்திரன் யுவராஜ் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இப் பாடசாலையில் 2010 ஆம் ஆண்டு விஞ்ஞானத்துறை அறிமுகப்படுத்தப்பட்டதுஅப்போதைய மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் க.பாஸ்கரன் ,கோட்டக் கல்வி பணிப்பாளர் ந.தயாசீலன் முயற்சியினால் அப்போதைய அதிபர் த. சோமசுந்தரம் காலத்தில் உருவாக்கப்பட்டது.

ரவீந்திரன் யுவராஜ் கிராமத்தில் இவர் இரண்டாவது வைத்தியராக தெரிவாகி இருக்கின்றார். கிராமத்தில் முதலாவது வைத்தியராக ஞானசூரியம் தவேஸ்குமார் அன்று மட்டக்களப்பில் பயின்று தெரிவாகி இருந்தார் என்று முன்னாள் அதிபர் சிவஞானம் அகிலேஸ்வரன் வாழ்த்து தெரிவித் திருந்தார்.

# காரைதீவு- மண்டூர் திருத்தல பாதயாத்திரை




**( காரைதீவு நிருபர் சகா)**

காரைதீவில் இருந்து மண்டூர் முருகன் ஆலயத்திற்கான திருத்தல பாதயாத்திரை இந்துமத எழுச்சியுடன் நேற்றுமுன்தினம்(3) சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. முன்னொரு போதுமில்லாத வகையில் சுமார் ஐயாயிரம் அடியார்கள் உணர்வுடன் கலந்து கொண்டனர். காரைதீவு அடியார்களுடன் அட்டப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை ஆகிய கிராம மக்களும் கலந்து கொண்டனர்.

முருகப்பெருமான் திருவுருவப் படங்கள் தாங்கிய அலங்கரிக்க பட்ட ஏழு உழவு இயந்திரங்கள் முன்னதாக செல்ல, அடியார்கள் “அரோகரா” கோசம் விண்ணைப்பிளக்க, நந்திக் கொடி தாங்கி ,.பஜனைப் பாடல்கள் சகிதம் பாதயாத்திரை நகர்ந்தது. சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் அடியார்கள் வரிசையில் சென்றமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நேற்று (3) சனிக்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் மாவடி ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரை ஐந்து மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்தது. அங்கிருந்து கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம் ,ஸ்ரீ முருகன் ஆலயத்தை அடைந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ,கிட்டங்கி, சவளக்கடை ,நாவிதன்வெளி, வேப்பயடி ,தம்பலவத்தை சென்று மண்டூர் ஆலயத்தை சென்றடைந்தது. இடையிலேயே ஆலயங்கள் அன்பர்கள் நீராகாரம் வழங்கி னார்கள்.

ஆலயத்தை சென்றடைந்ததும் அங்கு காரைதீவு அடியார்கள் பஜனை பாடி பூஜையில் கலந்து கொண்டனர்.கடந்த இரண்டு வருடங்களுக்கு பிற்பாடு இடம்பெற்ற பாதயாத்திரை என்பதால் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

# ஏறாவூர் பொலிஸார் 56 பேருக்கு சன்மானம்

**(ரக்ஸனா)**

போதைப் பொருள் ஒழிப்பில் அர்ப்பணிப்போடு கடமையாற்றிய ஏறாவூர் பொலிஸார் 56 பேருக்கு ரூபாய் 8 இலட்சத்து 25 ஆயிரத்து 250 ரூபாய் சன்மானத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். இலங்கைப் பொலிஸ் சேவையின் 156வது வருட நிகழ்வு வாரத்தையொட்டிய வைபவம் ஏறாவூர் பொலிஸ் நிலைய வளாகத்தில் சனிக்கிழமை 03.09.2022 இடம்பெற்றது. இந்நிகழ்வில் வைத்தே போதைப் பொருள் ஒழிப்பில் சிறப்பாகச் செயற்பட்டு போதைப் பொருள் விடயத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தமைக்காக 56 பொலிஸாருக்கு சன்மான ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.

அதிகூடிய சன்மானத் தொகையான 228750 ரூபாவை ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சியாம்தீன் பெற்றுக் கொண்டார். அதற்கடுத்தபடியாக பொலிஸ் உத்தியோகத்தர் டபிள்யூ. ஜீ. சஞ்சய 109100 ரூபாவைப் பெற்றுக் கொண்டார். போதைப் பொருள் ஒழிப்பில் துணிச்சலாகக் கடமையாற்றிய ஒரேயொரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரான கந்தசாமி கவிதாவுக்கும் சன்மான ஊக்குவிப்புத் தொகை வழங்கி வைக்கப்பட்டது. ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் மொத்தம் 97 பொலிஸார் கடமையாற்றுகின்றனர்.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

**கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்**

**காண வாரீர்!**



“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206